மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முன்னறிவிப்புக் கொடுக்காமல் இப்படி எழுந்து எதுவும் பேசக்கூடாது. உட்காருங்கள். முறைப்படி தகவல் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு)

திரு. இரா. தாமரைக்கனி: ஆனால் கோட்டையிலே கொடியை இறக்கிவிட்டார்களே ? (குறுக்கீடு)

பிற்பகல் 12.05

திரு. ச. அழகிரி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான்கூட விசாரித்தேன். விசாரித்த அளவில், கொடி கிழிந்து போயிருப்பதால் அதை மாற்றுவதற்காக இறக்கியிருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கொடியை மாற்ற இறக்கியிருக்கிறார்கள். அதற்காக இப்படி ஒருவரை அநியாயமாகச் சாகடிப்பது நன்றாக இல்லை. திரு.எஸ்.வி. கிருஷ்ணன், பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர், அதாவது, இதுபோன்ற சம்பவங்களை சரியான தகவல் இல்லாமல், அவையிலே கிளப்புவது என்பது சரியல்ல. ஏனென்றால், இந்தப் பிரச்சினை, முன்னாள் குடியரசுத் தலைவர் சம்பந்தப்பட்டது. அவர் நோய்வாய்ப்பட்டிருக்கிறார். அப்படி இருக்கும்போது இந்த அவையிலே வந்து, பொருத்தமற்ற முறையில் திடீரென்று அறிவிப்பது என்பது சரியல்ல என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். (குறுக்கீடு)

திரு. சி. ஞானசேகரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசியது முன்னாள் குடியரசுத் தலைவர் சம்பந்தப்பட்டதாக இருப்பதால், அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிட்டால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது முன்னாள் குடியரசுத் தலைவர் சம்பந்தப்பட்டது என்கிற காரணத்தால் அது அவைக்குறிப்பில் இருக்கவேண்டாம் என்று உத்தரவிடுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விசாரித்த அளவில் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் சொன்ன தகவல் தவறான தகவல். இந்த

அவையை இந்த அளவுக்கு அதிர்ச்சிக்கு உள்ளாக்கக்கூடிய, உண்மைக்கு மாறான செய்தியை அவர் சொன்னதற்காக நான் வருத்தப்படுகின்றேன். முன்னாள் குடியரசுத் தலைவர் அவர்கள் உடல்நலம் குன்றியிருப்பது உண்மை. அவர் நீண்டநாள் வாழவேண்டும் என்ற அந்த வாழ்த்துக்களை இந்த அவையின் சார்பாக அவருக்கு நான் தெரிவித்து இந்த அளவில் நிறுத்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எஸ்.வி. கிருஷ்ணன். (குறுக்கீடு)

திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசியதை நீக்கிவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீக்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் பேசியவை இருக்கிறது. மற்றவை நீக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லாவற்றையும் தவறாகப் பேசி இருக்கிறார்கள். பேசியதை எல்லாம் எடுத்துவிடுங்கள், எடுத்துவிடுங்கள் என்று சொன்னால் எப்படி? நம்முடைய அவை எப்படி நடைபெறுகிறது என்பதை நாடு தெரிந்து கொள்ள வேண்டும். அதனால்தான் நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்திலும் கேட்டுக் கொள்கிறேன். துணைத் தலைவர் அவர்களிடத்திலும் கேட்டுக் கொள்கிறேன். அவைக் குறிப்பிலே பல விஷயங்கள் இடம்பெறுவதுதான் நல்லது. அவைக்குறிப்பிலிருந்து எடுக்கப்படுகிறது, எடுக்கப்படுகிறது என்று சொல்லி, ஒருமுறை மார்ச் 25 ஆம் தேதி நடைபெற்ற சட்டமன்ற நிகழ்ச்சியே எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வரலாற்றைக் கொண்டிருக்கிறது இந்த அவை. எனவே, இவையெல்லாம் எடுக்கப்படக்கூடாது. இருந்தால்தான் நாடு நம்மைப் புரிந்து கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இங்கே நடைபெற்ற அனைத்தும் நாட்டுக்குத் தெரிய வேண்டும் என்கிற காரணத்தினால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று அவை அப்படியே அவைக்குறிப்பில் இருக்க உத்தரவிடுகிறேன். திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

திரு. எஸ்.வி. கிருஷ்ணன்: கொடுமுடியாறு அணைக்கட்டுத் திட்டம் மாண்புமிகு முதல்வர் பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்தபோது